1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வடக்கே அமைக்கப்பட்டிருக்கிற ஒரு பெரிய இந்திய மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சித்த மருத்துவ நிபுணர்கள் சென்று ஆராய்ச்சி நடத்திவருகிறார்கள். ஆனால், சித்த மருத்துவம் சிறப்பான நிலைக்கு வருவதை அங்குள்ளவர்கள் விரும்பவில்லை—முன்பு இருந்த சலுகைகள், வாய்ப்புகள் எல்லாம் குறைந்து வருகின்றன என்பதாக அங்குள்ள டாக்டர் ரமணன் தெரிவிக்கிறார். அவரைக் கூட இங்கே ஏதாவது ஒரு துறைக்குத் தலைவராக அழைத்துக் கொண்டுவிடலாமோ என்கிற எண்ணம் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நான்கு சென்டரிலே ஆராய்ச்சிக்காக மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கிவருகிறது. அந்தப் பணம் அதற்காகவே இங்கு செலவிடப்படுகிறது. சென்னையில் அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் 'ரிசர்ச் என்க்குவயரி இன் யூனானி' பிரிவில் பத்து படுக்கைகளும், ஆயுர்வேதப் பிரிவில் 10 படுக்கைகளும்—அதற்குரிய டாக்டர் தலைமையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இது இந்திய மருத்துவக் கழகத்தின் உதவியோடு செய்யப்படுகிறது.

திரு. எஸ். வடிவேலு : தலைவர் அவர்களே, கோவில் தர்மஸ்தாபனங்களின் சார்பாக தமிழகத்தில் எத்தனை சித்த வைத்திய மருந்தகங்கள் நடத்தப்படுகின்றன? அவற்றிற்கு அரசின் பண உதவி ஏதாவது அளிக்கப்படுகிறதா? அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அண்மையில்தான் அந்த முயற்சி நிறைவேற்ற தொடங்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 14 திருக்கோவில்களில் சித்த வைத்திய மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டு, பி.ஐ.எம். பட்டம் பெற்ற டாக்டர்கள் அவற்றை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே இவை தொடங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் சில திருக்கோவில்களில் இம்மாதிரியான மருந்தகங்களை நடத்த முன் வந்திருக்கிறார்கள். இவற்றுக்கு அரசு நேரடியாக உதவவில்லை. அந்த அந்த வட்டாரத்திலுள்ள மக்களும் உதவி செய்கிறார்கள். திருக்கோவில்களின் சார்பாக நடத்தப்பெறும் இந்தப் பணி இந்தத் துறையின் மூலமாக நடைபெற வேண்டுமென்று அரசாங்கம் விரும்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

Primary Health Centres

* 63 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to convert Primary Health Centres in the State as Rural Hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

* 70 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டும் வேலை தொடங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கான திட்டமிட்டு கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகிவிட்டன. கட்டிடம் கட்டுவதற்கான நிலமும் பொதுமக்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளாகிவிட்டன என்று மாண்புமிகு அங்கத்தினர் கூறினர். இது அரசாங்கத்தினுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதாக இல்லை என்றார். கட்டிடம் கட்டப்படவில்லை என்பது குறை. அதற்கு வேண்டிய நிதிவசதியை தர முடியாததாக இருந்திருக்கலாம். அதைவிட கட்டிடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் நிலம் தர வேண்டும். ஆனால் அவர்களோ தந்திருப்பது 3 ஏக்கர்தான். Only three acres are available for construction of buildings. ஐந்து ஏக்கர் நிலம் தரவேண்டும். மேலும், இதற்காக ஒரு அடையாளத் தொகையாக 10 ஆயிரம் ரூபாய் தரப்பட வேண்டும். இந்தத் தொகையும் இதுவரையில் தரப்பட்டதாக அரசாங்கத்தின் குறிப்பில் இல்லை. ஆகவே, அவர்கள் ஆக்க வேண்டிய பணிகளை முதலில் செய்து முடித்துவிட்டு, அரசாங்கத்தின் ஆக்க வேலைகளைப் பற்றிச் சொன்னால், அது பற்றி கவனிக்கலாம்.

* 71 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any scheme under the consideration of the Government to increase the bed facilities in the Primary Health Centre of Melmalaiyanur Panchayat Union; and

(b) if so, when?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்போது 6 படுக்கைகள் உள்ளன. பக்கத்திலுள்ள செஞ்சி வட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையில் 16 படுக்கைகள் உள்ளன. எங்கள் பகுதிகளிலுள்ள ஏழை விவசாய மக்கள் நோய்வாய்ப்பட்டு, ஆஸ்பத்திரியில் அட்மிஷன் ஆகிறபோது வசதியில்லாத காரணத்தினால் அவர்களை மரத்தடியில் படுக்க வைக்கின்ற கோரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்யுமா ?